### மேயர்.பிரியாராஜன் தலைமை! சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட தொகுதிகளில்

# 9-வது நாளாக அமைச்சர் பி.கே.சேகர்பாபு மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணம்!

## மக்கள் தேவைகளைக் கேட்டறிந்தார்!

சென்னை,ஜன.11-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கொளத்தூர், அம்பத்தூர், வில்லிவாக்கம், திரு.வி.கநகர், எழும்பூர், துறைமுகம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோருடன் பகுதிகள் மற்றும் வார்டுகள் வாரியாக உள்ள பாகங்களில் பொதுமக்கள் தேவைகளை கண்டறியும் சிறப்பு முகாம் நேற்று ஒன்பதாவது நாளாக தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் நேற்று (10.01.2025) மாலை மேயர் திருமதி.பிரியா ராஜன் தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர் செ.தமிழ்வேந்தன். ஆகியோர் முன்னிலையில், இந்து சமய அற நிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 74,74அ வட்டங்களில் மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணம் மேற்கொண்ட நேரத்தில் பாகம் 27ஐ சார்ந்தவரும், கிருஷ்ணதாஸ் பிரதான சாலையில் வசிக்கும் சிட்டிபாபு ரங்கநாயகி மற்றும் பாகம் 78ஐ சார்ந்த நந்தினி ஆகியோர்கள் இஸ்திரி பெட்டி கேட்டு வைத்த கோரிக்கையை ஏற்றும், பாகம்.78 ஐ சார்ந்தவரும், பாஷ்யம் ரெட்டி

ஒன்றாவது தெருவில் வசிக்கும் சாந்தி என்பவர் கேட்ட தள்ளுவண்டி கோரிக்கையை ஏற்று அவர்களை நேற்று செல்லப்பா தெருவில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்கு அழைத்து அவர்கள் கேட்ட தள்ளுவண்டியையும், இஸ்திரி பெட்டிகளையும் வழங்கி மகிழ்ந்தார்.

இந்த நிகழ்வில் வட்ட செயலாளர்கள் எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### இந்தியாவிலேயே பெண்கள் அதிகம் வேலைக்குச் செல்கின்ற மாநிலம்

# பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்!

சென்னை, ஜன.11-

சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பா.ஜ.க. உறுப்பினர் டாக்டர் சரஸ்வதி பேசும் போது, தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்கிற வகையில் பேசினார்.

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியதாவது :

பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள் பெண்களுக்கு தமிழ்நாட்டிலே பாதுகாப்பு இல்லை. பெண்களுக்கு அதிகமான வேலைவாய்ப்பைத் தமிழ்நாட்டிலே வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கைகளையெல்லாம் இங்கே வைத்தார்கள். நீங்கள் ஆளுகிற மாநிலத்தைவிட இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தியாவிலேயே (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் தான் அதிகம் பேர் வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். சட்டம்ஒழுங்கு பெண்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருக்கிறது. இன்று காலையிலேகூட அதை இன்னும் வேகப்படுத்தக் கூடிய வகையில், இன்னும் கடுமையான சட்டத்தை இன்றைக்கு நான் இங்கே அறிமுகம் செய்திருக்கிறேன் என்பதையும் சட்டமன்ற உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிலளித்தார்.

### லலிதாபுரம் என்.துரை தலைமை! கே.ஏழுமலை எம்.சி. முன்னிலை! தியாகராயர் நகர்

# 141 வது வட்டத்தில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் பொங்கல் விழா!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. சிறப்புரை! தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜன. 11

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி, 141 வது வட்ட தி.மு.க. சார்பில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மற்றும் தமிழ் புத்தாண்டு பொங்கல் விழாவை முன்னிட்டு 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (11.1.2025 சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில், காமராஜர் காலனி, தியாகராய நகரில் நடைபெறுகிறது.

141 வது வட்டக் கழகச் செயலாளர் லலிதாபுரம் என். துரை தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, கோ.சு.மணி, ராஜா அன்பழகன், மோனிஷா கருணாநிதி, கோ.உதயசூரியன், ஜெ.ஜானகிராமன், எஸ். லட்சுமிகாந்தன், பி.மாரி, ஜி.பி.செந்தில்குமரன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பி. கிருஷ்ணமூர்த்தி, பி.பழனிச்சாமி, எஸ்.எம். கார்த்திக் ராஜா, கே.லட்சுமிபதி, ஏ.ஆர்.இ.சுப்பிரமணி, எஸ்.சரவணன், எம். பாபு, ஏ.கோவிந்தராஜ், ஆர்.குணசேகரன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., சைதை சாதிக் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் எஸ். மோகன், எஸ்.பத்மபிரியா, மாம்பழம் ஆ.சந்திரசேகர், கோடம்பாக்கம் மு.சத்தியா, நந்தனம் வேதா, எஸ். மலர், என்.அன்பழகன், எம். ஆறுமுகம், ஜி.டி.அம்பேத்கார், மு.மணிவண்ணன், இரா.பொன்னிவளவன், வி.பி.எஸ்.ஜெனார்த்தா, ஜி.மோகன்ராஜ், என்.ராமகிருஷ்ணன், எஸ்.பாஸ்கர், பாபா சுரேஷ், க.சந்திரசேகர், ப.சாந்தி பங்காரு மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின்அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

141 வது வட்டக் கழக துணைச் செயலாளர் எம். மகேஸ்வரி நன்றி கூறுகிறார்.

### தமிழ்நாட்டில் "பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்" மூலம் - இதுவரை

# நமது முதல்வர் - 7,556 வகுப்பறைகளை திறந்து வைத்துள்ளார்!

### சட்டப்பேரவையில் - பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பெருமிதம்!

சென்னை, ஜன. 10 -

சட்டப்பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தின் போது பதிலளித்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி, "பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் மூலம் மட்டும், நமது முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டில் இதுவரை 7,556 வகுப்பறைகளைத் திறந்து வைத்துள்ளார்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**டாக்டர் சி.சரஸ்வதி:** மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், நகப்பாளையம் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை மற்றும் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:**

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், நகப்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, கருத்துருக்கள் பெறப்பட்டு, கூடுதலாக 4 வகுப்பறைகளும், 200 மீட்டருக்கான சுற்றுச் சுவரும் 2025-2026 ஆம் கல்வியாண்டில், முன்னுரிமை அடிப்படையில், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக கட்டித் தரப்படும்.

**டாக்டர் சி. சரஸ்வதி:** மேலும், நகப்பாளையம் ஊராட்சி துவக்கப் பள்ளியில் போதுமான அளவில் கழிப்பறை வசதிகள் இல்லாத காரணத்

தினால், மாணவச் செல்வங்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, இப்பள்ளிக்கு 2 கழிப்பறை வசதிகள் செய்து தரப்பட வேண்டும். மேலும், நகப்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி மற்றும் உயர் நிலைப் பள்ளிக்கு மொத்தம் 240 மீட்டர் நீளத்திற்கு சுற்றுச் சுவர் தேவைப்படுகிறது. அங்கு சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தினால், மது பிரியர்கள் இரவு நேரங்களில் பள்ளியின் உள்ளே வந்து மது அருந்திவிட்டு, கண்ணாடி பாட்டில்களை அங்கேயே உடைத்துவிட்டுச் செல்வதால், பாதுகாப்பற்ற நிலை உருவாகிறது. எனவே, அரசு விரைந்து சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** மேற்படி பள்ளிக்கூடத்தைப் பொறுத்தவரைக்கும் 6 வகுப்பறைகளும், 12 கழிப்பறைகளும், 1 உயர் நுட்ப ஆய்வகமும், 1 அறிவியல் ஆய்வகமும் ஏற்கெனவே இருக்கின்றது. ஏற்கெனவே சொன்னதுபோல், கூடுதலாக இன்னும் 4 வகுப்பறைகளும், 200 மீட்ட ருக்கான சுற்றுச் சுவரும் வருகிற கல்வியாண்டிலே கண்டிப்பாக கட்டித் தரப்படும்.

**டாக்டர் சி. சரஸ்வதி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மொடக்குறிச்சி ஒன்றியத் திற்குட்பட்ட லக்காபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 1,100 மாணவ, மாணவிகள் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் கல்வி பயின்று வருகின்றனர்.

மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பள்ளியில் 32 வகுப்பறைகள் தேவைப்படுகிறது. ஆனால், தற்போது 20 வகுப்புகள் மட்டுமே உள்ளன. வகுப்பறைகள் பற்றாக்குறையால் மாணவர்களுக்கு மரத்தடியிலும், பள்ளி veranda விலும், ஆய்வகத்திலும் வகுப்புகள் நடந்து கொண்டிருக்கிறது. எனவே, பள்ளிக்குக் கூடுதலாக 12 வகுப்பறைகளும், நூலகத்திற்கு ஒரு அறையும், அறிவியல் ஆய்வகத்திற்காக ஒரு அறையும் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** முதலமைச்சர் அவர்களோடு ஈரோடு மாவட்டத்திற்கு நாங்கள் அரசு நிகழ்ச்சிக்கு செல்லும் பொழுதே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் இதுசார்ந்து கோரிக்கைகள் வழங்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களும் அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் துறைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். கண்டிப்பாக நீங்கள் கேட்கின்ற அதிகப்படியான வகுப்பறைகள் கட்டுகின்ற அந்தப் பணிக்கு கருத்துரு பெறப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல், இதுவரைக்கும் நீங்கள் பார்த்தீர்களென்றால், நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் 'பேராசிரியன் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 7,500 கோடி ரூபாயில் இதுவரைக்கும் 3,497 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே திறந்த கட்டடங்கள் மட்டும் என்று பார்த்தால், 7,556 வகுப்பறைகளை இதுவரைக்கும் நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது நடைபெற்றிருக்கக்கூடிய பணிகளைப் பார்த்தீர்களென்றால், 6,353 வகுப்பறைகள் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆய்வகங்கள், கழிவறைகள் என்று வரும்பொழுது 351 ஆய்வகங்களும், 350 கழிவறைகள் unit கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதேபோல், சுற்றுச் சுவர் என்று வரும்போது, 940 மீட்டருக்கு இந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது ongoing process.

இதில் நீங்கள் கேட்கக்கூடியது நம்முடைய கம்பம் சட்டமன்ற உறுப்பினர் நா. இராமகிருஷ்ணன் அவர்களும், க.கார்த்திகேயன் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். இதெல்லாம் படிப்படியாக ஒவ்வொன்றாக உங்களுக்கே தெரியும். இந்த 3 ½ வருடத்தில் திராவிட மாடல் அரசில்தான் எங்கு பார்த்தாலும் பள்ளிக் கட்டடங்கள் கட்டிக் கொண்டேயிருப்பதை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்கள் நீங்கள் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரும்காலத்தில் அதுவும் விரைவாக யார், யாரெல்லாம் கேட்கிறீர் களோ அதற்கான கட்டடங்கள் எல்லாம் கட்டப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### மா.நாகராஜன் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# 40(அ) வட்ட தி.மு.க. சார்பில் பொங்கல் விழா புத்தாடைகள்!

### ஆர்.டி.சேகர் வழங்குகிறார் ! இரா.லட்சுமணன் ஆர்.வெற்றிவீரன் என்.மருதுகணேஷ் குமாரி நாகராஜன் பங்கேற்பு !

சென்னை ஜன.10

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40(அ) வட்டத்தில் பொங்கல் விழா மற்றும் தைத்திருநாளாம் தமிழர் திருநாளை முன்னிட்டு புத்தாடை வழங்கும் நிகழ்ச்சி நாளை (12.01.2025 ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணியளவில் தமிழ்நாடு பருப்பு தயாரிப்போர் சங்க திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

வட்ட கழக செயலாளர் மா.நாகராஜன் தலைமை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார்.

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி மகளிர்அணி அமைப்பாளர் குமாரி நாகராஜன் எம்.சி, ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, நிகழ்ச்சியை துவக்கி வைத்து புத்தாடை வழங்குகிறார்.

ஆர்.வெற்றிவீரன், என்.மருதுகணேஷ், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், நா.கோதண்டன், வானூர் கே.ராஜி, லைலேண்டு கே.மோகன், எம்.எம்.சாமி, டி.ஆர்.தணிகாசலம், பி.ஜானகி, இந்து ஜி.ராஜேந்திரன், பி.பத்மநாபன், பி.மாலதி, மு.ஆனந்தன், அ.பிரான்சிஸ்சேவியர், இரா.பாஸ்கர், சி.ஜெ.மோகன், வி.ராஜசேகர், டி.மணிமாறன், ஆர்.சீமான், எம்.எஸ்.ரவி, மு.சா.அரித்குமார், கே.கலா, க.ஹேமந்த்குமார், டி.விஜய குமார், ஆர்.வெங்கட், ஆர்.பத்மநாபன், எஸ்.எம்.முருகன், என்.டேனியல், கே.கலைவாணி, கு.பாஸ்கர், பி.சுதர்சன், வி,ஏழுமலை, வி.ஜீவா, நிர்மலாதேவி, பி.ஜெகதீஸ், நிர்மலா, எல்.சார்லஸ், ஜி.தனேஷ்குமார், ஏ.விஜயகுமார், டி.சக்திவேல், ஏ.அனிதா, ஜெ.சீனிவாசன், எஸ்.கிருஷ்ணவேணி, எல்.பேட்ரிக், எம்.சரவணன், ஆர்.கீதா, நாகஜோதி, எஸ்.சரோஜா, எம்.கெஜலட்சுமி, சுகன்யா, காஞ்சனா, ஜி.கண்ணன், ஆர்.முத்துவீரன், ஆர்.நரேஷ், டி.அசோக், எம்.செந்தில், கோபால், ஆர்.புவனேஷ், ஆர்.மணிகண்டன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

ஜி.பிரேம்குமார் நன்றி கூறுகிறார்.

தாம்பரம் மாநகர தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் மற்றும் பொங்கல் விழா கிழக்கு தாம்பரம் வாசுதேவா திருமண மாளிகையில் தாம்பரம் மாநகரக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர், கழக நாடாளுமன்ற மக்களவைக் குழு தலைவர் டி.ஆர்.பாலு கலந்துகொண்டு கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கினார். உடன் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், டி.காமராஜ், வே. கருணாநிதி, பகுதி கழக செயலாளர்கள் எஸ்.சேகர், மாடம்பாக்கம் நடராஜன், இரா.சுரேஷ் மற்றும் மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சிறப்பு விருந்தினர்கள், கழகத் தோழர்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

### தமிழ் மொழி மரபை மாற்றி அமைக்க நினைக்கும்

# ஆளுநரின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

திருவள்ளூர் 11;

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகர ஆவடி கிழக்கு பகுதி திமுக சார்பில் எளியோர் எழுச்சி நாள் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருமுல்லைவாயில் 60 அடி சாலை அருகே நடைபெற்றது.

பகுதி கழகச் செயலாளர் பேபி சேகர் தலைமை தாங்கினார்.

மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் மாநகர மேயர் உதயகுமார் பகுதி கழகச் செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், பொன் விஜயன், ஜி. நாராயண பிரசாந்த், மண்டல குழு தலைவர் அமுதா

பேபி சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் பகுதி கழக அவைத் தலைவர் க.மு. ஜான், மண்டல குழு தலைவர்கள் ஜோதிலட்சுமி அம்மு கவுன்சிலர் மாலா பிரகாஷ், பகுதி கழக நிர்வாகிகள் தீன தயளன், முத்து, சுஜாதா, வெங்கடேசன், துரை ராஜ், எம்.விமல், டேனியல் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள் இக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ்நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருமான சாமு.நாசர் சிறப்புரையாற்றினார்.

இதில் பேசிய அவர் தமிழ் மொழியை அவமதித்த எவரும் வாழ்ந்ததாக சரித்திரமே இல்லை. ஆளுநர் ஆர்.என். ரவி தமிழ் மக்களையும், தமிழ்நாட்டையும், தமிழ் மொழியையும் எப்பொழுதும் அவமதிப்பது வாடிக்கையாகி உள்ளது. பேரவை தொடக்கத்தில் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவது தான் மரபு . அந்த மரபை மாற்றி அமைக்க நினைக்கும் ஆளுநரின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது. தமிழ் மொழியினை மதிக்காத எவரும் தமிழ்நாட்டில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என சாடினார்.

நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு புடவை, சமையல் பாத்திரங்கள் விளையாட்டு வீரர்களுக்கு மட்டைப்பந்து, பந்து ,ஸ்டிக், கால்பந்து, இறகு பந்து ஆகியன வழங்கப்பட்டது .இந்நிகழ்ச்சியில் திமுக கழகப் பேச்சாளர்கள் ஈரோடு இறைவன், ஜோதி, மாவட்ட துணைச் செயலாளர் காயத்ரி ஸ்ரீதரன் மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார், ஆவடி கிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் டிசோசா, ராஜேந்திரன், துளசிங்கம் சக்தி வேலன், துருவன், கிருஷ்ணகுமார், பிரபுவேல், கோபால், பாண்டியன், எஸ். செல்வம், சுதாகரன், மாமன்ற உறுப்பினர் பைரவி ஜான், ஜெயப்பிரியா சரவணன், மற்றும் கழக நிர்வாகிகள் பணிகளில் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

முடிவில் 28 வது வட்டக் கழகச் செயலாளர் வி எம் நாகராஜ் நன்றி கூறினார்.